**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.**

2024 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15-ம் நாள்செவ்வாய்கிழமை

**IA NO.05/2024**

**In**

**RCOP.04/2018**

1) முருகேசன்

2) தமிழரசன் **.....வாதி/எதிர்மனுதாரர்**

**//எதிர்//**

வை. தமிழரசன் **.....பிரதிவாதி/எதிர்மனுதாரர்**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதி/எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.ஜெகதீசன்.,M.L., அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி/எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் 26.09.2024 அன்று தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

இந்த மனுவானது மனுதாரர்/வாதி/எதிர்மனுதாரர் தரப்பில் சி.பி.சி.பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர் உரிமையியல் நடைமுறைச்சட்டம் விதியின் கீழ் மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்து அதுவும் IA.No.05/2022 என்ற எண்ணில் விசாரணை செய்யப்பட்டு கடந்த 06.04.2024-ம் தேதியில் மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவினை எதிர்த்து அறந்தாங்கி சார்பு நீதிமன்றத்தில்

ஆர்.சி.ஏ மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆர்.சி.ஏ மனுவும் ATM20220011418C202400032 என்ற எண்ணில் நிலுவையில் உள்ளது. மேற்படி ஆர்.சி.ஏ மேல்முறையீட்டில் உத்தரவு பிறப்பிக்கும் வரையில் மேற்படி வழக்கு நடவடிக்கைகளை நிறுத்தம் (Stay) செய்து நிருத்திவைக்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**2. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

இந்த மனுவானது அசல் மனுவில் எதிர்மனுதாரரான தமிழரசன் என்பவரால் இந்த வழக்கில் எழுந்த வழக்கிடை மனு எண் .05/2022 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து சார்பு நீதிமன்றத்தில் RCA மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதால் அந்த மேல்முறையீட்டில் உத்தரவு பிறப்பிக்கும் வரை இவ்வழக்கு நடவடிக்கைகளை நிறுத்திவைக்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 41 விதி 5 (2) ஒரு உத்தரவை பிறப்பிக்கும் நீதிமன்றமானது அந்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்யும் கால கெடுவிற்குள் தடை உத்தரவு கோரும் தரப்பினருக்கு குந்தகம் ஏற்படும்பட்சத்தில் தடையுத்தரவு வழங்கலாம். மேற்கண்ட விதியின் படி ஒரு உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுவிட்டால் தடையுத்தரவானது அந்த மேல்முறையீட்டில் தான் பெற முடியுமே தவிர கீழமை நீதிமன்றத்தில் பெற முடியாது. மேலும் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழான அதிகாரத்தை எந்தெந்த சூழ்நிலையில் பயன்படுத்த முடியும் என்பது குறித்து மாண்புமிகு உச்சநீதிமன்றம் My Palace mutually aided co-operatuve society Vs. B.Mahesh C.A.No.005784-005784/2022 என்ற வழக்கில் "Such inherent power cannot override statutory prohibition or create remedied which are not contemplate under the code" என்று தீர்ப்பளித்துள்ளது. மேலும் வழக்கிடை மனு எண்.05/2022 ல் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்து மேற்படி மேல்முறையீடும் ATN20220011418C2040032 என்ற எண்ணில் கோப்பில் எடுக்கப்பட்டுள்ளதாக கட்சி செய்துள்ள நிலையில் தடை உத்தரவு மேற்படி மேல்முறையீட்டில் தான் கோர முடியும் என்பதால் மனுதாரரின் மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2024-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி**: இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

**//உண்மை நகல்//**

V SIVAGAMASUNDARY
Digitally signed by V SIVAGAMASUNDARY
Date: 2024.10.15 22:18:42 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை உத்தரவு**
**I.A.No. 05/2024**
**RCOP.No. 04/2018**
**நாள். 15.10.2024**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**